BUDGET
2020

# நம்மை
# ஒன்றிணைக்கும்
# வரவு செலவுத் திட்டம்

BUDGET 2020 Support. Transform. Care. Secure.

# ஒரு நிலையான பாதையை வடிவமைத்தல்

உலகளாவிய நிச்சயமற்ற சூழல்களுக்கு இடையில் ...

- பொருளியல் மாற்றங்கள்
- தொழில்நுட்ப இடையூறுகள்
- உலகமயமாதலுக்கான ஆதரவில் சரிவு
- கொவிட்-19
- அரசியலுக்கு அடிப்படையான புவியியல் சார்ந்த சர்ச்சைகள்
- மூப்படையும் மக்கள்தொகை

## நமது எதிர்காலத்தை **நம்பிக்கையுடன்** வடிவமைக்க, நமக்கு **$106 பில்லியன்** நிதித்திட்டம் உள்ளது



BUDGET 2020 Support. Transform. Care. Secure.

# ஒரு சிங்கப்பூராக முன்னேறுதல்

**2020-ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தைக்**
கொண்டு, நாம் வாய்ப்புகளைக் கைப்பற்றியும், நமது நிதி வளங்களைப் பயன்படுத்தியும்:



தொழில்நிறுவனங்களுக்கும் ஊழியர்களுக்கும்
**நிலைத்தன்மையையும் ஆதரவையும் வழங்குவோம்**



நமது பொருளியலையும் தொழில்நிறுவனங்களையும்
**உருமாற்றி, வளர்ச்சி காணச் செய்வோம்**



அனைத்து வயது சிங்கப்பூரர்களையும்
**பராமரித்து,**
**பேணி வளர்ப்போம்**



நமது எதிர்காலத்தை
**மேம்படுத்தி,**
**பாதுகாப்போம்**

**— ஒன்றிணைந்து —**

# நிலைத்தன்மை மற்றும் ஆதரவு

BUDGET 2020 **Support**. Transform. Care. Secure.

# கொவிட்-19 கிருமித்தொற்றால் பாதிக்கப்பட்ட துறைகளுக்கு உதவுதல்

## நிலைத்தன்மை மற்றும் ஆதரவுத் தொகுப்புத்திட்டம்

### சுற்றுப்பயணத் துறையிலுள்ள தொழில்நிறுவனங்கள்

- ரொக்கப் புழக்கத்திற்கு ஆதரவு அளிக்க **தற்காலிக இணைப்புக் கடன் திட்டம்**
- 2020-ஆம் ஆண்டுக்கான சொத்து வரியில், **30 விழுக்காடு வரை தள்ளுபடி**

### விமானப் போக்குவரத்துத் துறை

- **விமானங்களைத் தரையிறக்குவதற்கும், நிறுத்தி வைப்பதற்குமான** கட்டணங்களுக்குத் தள்ளுபடி; தரையில் விமானங்களைக் கையாள்பவர்களுக்கு உதவி
- சாங்கி விமான நிலையத்திலுள்ள கடைகளுக்கும், **சரக்கு முகவர் நிறுவனங்களுக்கும் வாடகைத் தள்ளுபடி**



# கொவிட்-19 கிருமித்தொற்றால் பாதிக்கப்பட்ட துறைகளுக்கு உதவுதல்

## நிலைத்தன்மை மற்றும் ஆதரவுத் தொகுப்புத்திட்டம்

### உணவங்காடிக் கடைக்காரர்கள்

- அரசாங்கம் நிர்வகிக்கும் உணவங்காடி நிலையங்களில் கடை வைத்திருப்போருக்கு **ஒரு மாத வாடகைக் கட்டணத் தள்ளுபடி**

### வாடகைக்கு இருக்கும் வர்த்தக நிறுவனங்கள்

- அரசாங்கம் நிர்வகிக்கும் சொத்துக்களில் வாடகைக்கு இருக்கும், தகுதிபெறும் வர்த்தக நிறுவனங்களுக்கு **அரை மாத வாடகைக் கட்டணத் தள்ளுபடி**

### டெக்சி, தனியார் வாடகை வாகனப் போக்குவரத்துத் துறை

- டெக்சி, தனியார் வாடகை வாகன ஓட்டுநர்களுக்கான **ஆதரவுத் தொகுப்புத்திட்டம்**



BUDGET 2020 **Support**. Transform. Care. Secure.

# ஊழியர்களுக்கு ஆதரவு அளித்தல்

## நிலைத்தன்மை மற்றும் ஆதரவுத் தொகுப்புத்திட்டம்

### வேலைகள், சம்பள அதிகரிப்பு, திறன் பயிற்சி ஆகியவற்றுக்கு ஆதரவு

- **வேலை ஆதரவுத் திட்டத்தின்** மூலம், உள்ளூர் ஊழியர்களைத் தக்கவைத்துக்கொள்ளும் தொழில்நிறுவனங்களுக்கு ஒரே முறை எனும் அடிப்படையிலான சம்பள ஆதரவு வழங்கப்படும்
- சிங்கப்பூர் ஊழியர்களுக்கான சம்பள அதிகரிப்பை ஆதரிக்க, **சம்பள உதவித்தொகைத் திட்டம்** மேம்படுத்தப்படும்
- தொழில்நிறுவனங்கள், உள்ளூர் ஊழியர்களைத் தக்கவைத்துக்கொள்ளவும் அவர்களின் திறன்களை மேம்படுத்தவும் ஆதரவளிக்க, **மாற்றியமைத்துக்கொண்டு, வளர்ச்சியடைதல் திட்டத்தின்** கீழ் உள்ள மறுவேலையமர்வுத் திட்டங்கள் மேம்படுத்தப்படும்



BUDGET 2020 Support. Transform. Care. Secure.

# தொழில்நிறுவனங்களுக்கு ஆதரவு அளித்தல்

## நிலைத்தன்மை மற்றும் ஆதரவுத் தொகுப்புத்திட்டம்

### தொழில்நிறுவனங்களுக்கு ரொக்கப் புழக்கத்தில் ஆதரவு

- **மேம்படுத்தப்பட்ட தொழில்நிறுவன நிதி ஆதரவுத் திட்டம் – சிறிய, நடுத்தர நிறுவனங்களுக்கான நடைமுறை மூலதனக் கடன்**
    - தற்காலிக ரொக்கப் புழக்கத்தில் ஆதரவு
- **2020-ஆம் மதிப்பீட்டு ஆண்டில், நிறுவன வருமான வரித் தள்ளுபடி**
    - வரிக்கு உட்படுத்தப்படும் வருமானத்தில், 25 விழுக்காடு தள்ளுபடி (ஒவ்வொரு நிறுவனத்துக்கும் அதிகபட்சம் $15,000 தள்ளுபடி)



# உருமாற்றமும் வளர்ச்சியும்

BUDGET 2020 Support. **Transform**. Care. Secure.

# வளர்ச்சியை ஊக்குவித்தல், தொழில்நிறுவனங்களை உருமாற்றுதல்

தொழில்நிறுவனங்கள் தங்கள் வளர்ச்சிக்கான முதல் முயற்சிகளை மேற்கொள்ள உதவுதல்

## உருமாற்றம் மற்றும் வளர்ச்சிக்கான உத்தி

### தொழில்நிறுவனங்களின் வளர்ச்சிக்கான தொகுப்புத்திட்டம்

- **அரசாங்க வர்த்தகப் பரிவர்த்தனைகளுக்கான இணையவாசல்** துவங்கப்படுதல் – அரசாங்க வர்த்தகப் பரிவர்த்தனைகளுக்கான ஒருங்கிணைந்த தளம்
- **சிறிய, நடுத்தர நிறுவனங்களுக்கான மின்னிலக்கமயமாதல் திட்டம்**, மின்னிலக்கத் தொழில்நுட்பத்தைக் கூடுதலாகப் பயன்படுத்த ஊக்குவிக்கும் நோக்கில் விரிவாக்கப்பட்டுள்ளது
- **சந்தைத் தயார்நிலை உதவி**, மேலும் அதிகமான தொழில்நிறுவனங்கள் புதிய சந்தைகளுக்குள் நுழைவதற்கு உதவும் நோக்கில் மேம்படுத்தப்பட்டுள்ளது



# வளர்ச்சியை ஊக்குவித்தல், தொழில்நிறுவனங்களை உருமாற்றுதல்

முதிர்ச்சியடைந்த தொழில்நிறுவனங்கள் மேலும் உருமாற்றம் காண ஆதரவளித்தல்

## உருமாற்றம் மற்றும் வளர்ச்சிக்கான உத்தி

### தொழில்நிறுவனங்களுக்கான உருமாற்றத் தொகுப்புத்திட்டம்

- தொழில்நிறுவனங்களில் தலைமைத்துவத் திறன்களை மேம்படுத்த, புதிய **தொழில்நிறுவன உருமாற்றத்துக்கான தலைமைத்துவத் திட்டம்**
- அதிகமான தொழில்நிறுவனங்கள் உருமாற்றம் காண்பதற்கு ஆதரவளிக்கும் நோக்கில், **தொழில்நிறுவன மேம்பாட்டு மானியம்**, மேலும் அதிகமானோரைச் சென்றடைவதற்கான நடவடிக்கைகள்



# வாய்ப்புகளைக் கைப்பற்றிக்கொள்வதற்காக நமது இளையர்களைத் தயார்படுத்துதல்

## கூடுதல் வெளிநாட்டு அனுபவம்

- **“70-70” இலக்கு** – உள்ளூர் உயர்கல்வி நிலையப் பட்டதாரிகளில் 70 விழுக்காட்டினர் வெளிநாட்டு அனுபவத்தைப் பெற்றிருக்கவேண்டும்; அவர்களில், 70 விழுக்காட்டினர், ஆசியான், சீனா அல்லது இந்தியாவில் அனுபவம் பெற்றிருக்கவேண்டும்.
- புதிதாக அறிமுகப்படுத்தப்படும் **ஆசிய வட்டார அனுபவத்திற்கான தயார்நிலைத் திட்டம்**, ஆசியான், சீனா அல்லது இந்தியாவில் அனுபவம் பெற இளையர்கள் மேற்கொள்ளும் பயணங்களுக்கு ஆதரவளிக்கும்
- **திறனாளர்களை உலகமயமாதலுக்குத் தயார்படுத்தும் திட்டத்தின்** கீழ், வேலைப் பயிற்சிக்கான ஆதரவை மேம்படுத்துதல்



# அனைவருக்கும் வேலை நியமனத்தை மேம்படுத்துதல்

வாழ்நாள் கற்றலும் திறன் நிபுணத்துவமும் கொண்ட ஒரு கலாச்சாரத்தை வளர்த்தல்

## SKILLSfuture -ரின் அடுத்த கட்டம்

- 25 வயதுக்கும் மேற்பட்ட சிங்கப்பூரர்களுக்கு **$500 ஸ்கில்ஸ்ஃபியூச்சர் பயிற்சி உதவி நிதி**
- ஊழியர்களுக்குப் **பயிற்சி அளிக்கவும்,** வேலைகளை **மறுவடிவமைக்கவும்** நிறுவனங்களுக்கு ஆதரவளித்தல்
  - நிறுவனங்களுக்கு, ஊழியர் அணி மற்றும் தொழில்நிறுவன உருமாற்றத்தில் ஆதரவளிக்க, புதிய **ஸ்கில்ஸ்ஃபியூச்சர் தொழில்நிறுவன உதவித் தொகை**
  - **உற்பத்தித்திறன் தீர்வுகளுக்கான மானியத்தின்** கீழ், வேலை மறுவடிவமைப்புக்கான ஆதரவை அறிமுகப்படுத்துதல்
  - மாணவர்களிடையே, துறைகளுக்கான ஆயத்தநிலையை மேம்படுத்த, **ஸ்கில்ஸ்ஃபியூச்சர் வேலை-கல்வித் திட்டங்களுக்கான** இடங்களை இரு மடங்கிற்கு மேல் அதிகரித்தல்



BUDGET 2020 Support. **Transform**. Care. Secure.

# அனைவருக்கும் வேலை நியமனத்தை மேம்படுத்துதல்

வாழ்க்கைத் தொழில் மாற்றங்களை ஆதரித்தல்

## பணியிடைக்கால வேலைக்கான SKILLSfuture ஆதரவுத் தொகுப்புத்திட்டம்

- 2020-ஆம் ஆண்டில் 40 முதல் 60 வயதை எட்டும் சிங்கப்பூரர்களுக்குக், **கூடுதலாக $500 ஸ்கில்ஸ்ஃபியூச்சர் பயிற்சிக்கான உதவி நிதி**
- 40 முதல் 50 வயதில் இருக்கும் ஊழியர்களின் வாழ்க்கைத் தொழில் மாற்றங்களை ஆதரிக்க, **புதுத் திறன் பயிற்சிக்கான திட்டங்களின்** இடங்களை அதிகரித்தல்
- வேலை தேடும் 40 வயதுக்கும் மேற்பட்டவர்களை, புதுத் திறன் பயிற்சிக்கான திட்டங்களின் மூலம் **பணியில் அமர்த்தும் முதலாளிகளுக்கு ஊக்கத்தொகை**



BUDGET 2020 Support. **Transform**. Care. Secure.

# அனைவருக்கும் வேலை நியமனத்தை மேம்படுத்துதல்

மூத்த ஊழியர்களின் வேலை நியமனத்தை ஆதரித்தல்

## மூத்த ஊழியருக்கான ஆதரவுத் தொகுப்புத்திட்டம்

- **மூத்த ஊழியருக்கான வேலை நியமன உதவித்தொகை**, 55 வயதுக்கும் மேற்பட்ட சிங்கப்பூர் ஊழியர்களை வேலையில் அமர்த்தும் நிறுவனங்களுக்குச் சம்பளக் கழிவுத் தொகைகளை வழங்கும்
- **மத்திய சேமநிதி சந்தா தொகை அதிகரிப்பிற்கான கழிவு**, மூத்த ஊழியர்களுக்கு முதலாளி செலுத்தும் சந்தா தொகை அதிகரிப்பில் பாதியைக் குறைக்கும்
- **மூத்த ஊழியர்களின் பணி ஓய்வுபெறும் வயதை முன்கூட்டியே அதிகரிக்கும் நிறுவனங்களுக்கான மானியம்**, மூத்த ஊழியர்களின் பணி ஓய்வுபெறும் வயதையும், மறுவேலை நியமனத்திற்கான வயதையும், சட்டபூர்வ மாற்றங்களுக்கு முன்கூட்டியே, சுயமாக அதிகரிக்கும் தொழில்நிறுவனங்களுக்கு ஆதரவளிக்கும்
- **பகுதி நேர மறு-வேலை நியமனத்திற்கான மானியம்**, பகுதி நேர மறு-வேலை நியமனத்திற்கான முன்னேற்பாடுகளை முறைப்படுத்த நிறுவனங்களுக்கு ஊக்கமளிக்கும்



# பரிவு காட்டிப் பேணி வளர்த்தல்

BUDGET 2020 Support. Transform. Care. Secure.

# சிங்கப்பூரர்களுக்கு வாழ்க்கைச் செலவுகளைச் சமாளிக்க உதவுதல்

## பராமரிப்பு மற்றும் ஆதரவுத் தொகுப்புத்திட்டம்

### பராமரிப்பு மற்றும் ஆதரவு - ரொக்கம்

- 21 வயதுக்கும் மேற்பட்ட அனைத்து சிங்கப்பூரர்களுக்கும் **$300 வரை**
- 20 வயதுக்கும் குறைவான, குறைந்தது ஒரு பிள்ளையுடைய ஒவ்வொரு சிங்கப்பூர்க் குடியுரிமை கொண்ட பெற்றோருக்கும் **கூடுதலாக $100**

### பேஷன் அட்டையில் $100 தொகை நிரப்புதல்

- 2020-ஆம் ஆண்டில் 50 வயதுக்கும் மேற்பட்ட சிங்கப்பூரர்களுக்கு **$100** நிரப்புத் தொகை



BUDGET 2020 Support. Transform. Care. Secure.

# சிங்கப்பூரர்களுக்கு வாழ்க்கைச் செலவுகளைச் சமாளிக்க உதவுதல்

## பராமரிப்பு மற்றும் ஆதரவுத் தொகுப்புத்திட்டம்

### வேலைநலன் சிறப்புத் தொகை

- 2019-இல் வேலை செய்ததற்காக, **20% கூடுதல்** வேலைநலன் துணை வருமானத் தொகை (குறைந்தபட்சம் $100)

### மளிகைப் பொருட்களுக்கான பற்றுச்சீட்டுகள்

- ஓரறை அல்லது ஈரறை வீவக வீட்டில் வசிக்கும் 21 வயதுக்கும் மேற்பட்ட சிங்கப்பூரர்களுக்கு, **2020 மற்றும் 2021-ஆம் ஆண்டுகளில், ஆண்டுக்கு $100**



BUDGET 2020 Support. Transform. **Care**. Secure.

# சிங்கப்பூரர்களுக்கு வாழ்க்கைச் செலவுகளைச் சமாளிக்க உதவுதல்

## பராமரிப்பு மற்றும் ஆதரவுத் தொகுப்புத்திட்டம்

### கூடுதலான பொருள், சேவை வரிப் பற்றுச்சீட்டு – யு-சேவ்

- இவ்வாண்டு, தகுதிபெறும் வீவக குடும்பங்கள் அனைத்திற்கும் கிடைக்கக்கூடிய வழக்கமான யு-சேவ் தள்ளுபடியை விட **இரண்டு மடங்கு** அதிகம்
- **பெரிய குடும்பங்களுக்கு** வழக்கமாகக் கிடைக்கும் யு-சேவ் தள்ளுபடியை விட, இவ்வாண்டு இரண்டரை மடங்கு **அதிகமான தள்ளுபடி கிடைக்கும்**

### சேவை, பராமரிப்புக் கட்டணத் தள்ளுபடி

- தகுதிபெறும் குடும்பங்கள் **ஒன்றரை முதல் மூன்றரை மாதம் வரையிலான** சேவை, பராமரிப்புக் கட்டணத் தள்ளுபடியை இவ்வாண்டு பெறுவர்



BUDGET 2020 Support. Transform. Care. Secure.

# நமது குழந்தைகளைப் பேணி வளர்த்தல்

## பாலர் பள்ளிச் சேவைகளுக்கான ஆதரவை மேம்படுத்துதல்

- அரசாங்க ஆதரவுபெற்ற **கூடுதலான பாலர் பள்ளி இடங்கள்**
- பாலர் பள்ளிக் கட்டண உதவித் திட்டத்தின் கீழ் கூடுதல் நிதியுதவி பெறுவதற்கான **வருமான உச்ச வரம்பை, மாதம் $12,000-க்கு உயர்த்துதல்**
- எல்லா வருமானப் பிரிவினருக்கும் **கூடுதலான பாலர் பள்ளி நிதியுதவிகள்**
  - முதன்மை நிறுவனங்கள் நடத்தும் பாலர் பள்ளிகளில், நாள் முழுவதற்குமான குழந்தைப் பராமரிப்புக்கு, குறைந்த வருமானக் குடும்பங்கள் **மாதத்திற்கு மிகக் குறைவாக, $3 மட்டுமே** செலுத்தவர்



BUDGET 2020 Support. Transform. Care. Secure.

# நமது மாணவர்களைப் பேணி வளர்த்தல்

## கல்விக்கு நிதி உதவி

### கல்வி அமைச்சின் நிதி உதவித் திட்டம்

- புகுமுக வகுப்பு மாணவர்களுக்கான கல்வி உதவித் தொகையை ஆண்டுக்கு **$900-யிலிருந்து $1,000-க்கு** அதிகரித்தல்
- எல்லா மாணவர்களுக்கும் **போக்குவரத்து நிதியுதவிகளை** அதிகரித்தல்
- உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்குப் **பள்ளி வேளையிலான உணவுக்குரிய நிதியுதவிகளை** அதிகரித்தல்

### உயர்கல்விக்குக் கூடுதல் கல்வி உதவித் தொகைகள்

- பலதுறைத் தொழிற்கல்லூரி மற்றும் தன்னாட்சிப் பல்கலைக்கழக மாணவர்களுக்குக் **கூடுதல் கல்வி உதவித் தொகைகள்**
- **முழு நேரத் தொழில்நுட்பக் கல்விக் கழக மாணவர்களுக்கான ரொக்கக் கல்வி உதவித் தொகை ஆண்டுக்கு $200 வரை அதிகரிப்பு**



BUDGET 2020 Support. Transform. Care. Secure.

# சிங்கப்பூரர்கள் வீட்டு உரிமையாளர்களாக உதவுதல்

## தரமான வீடுகளைப் பெற வகைசெய்தல்

### மேம்படுத்தப்பட்ட மத்திய சேமநிதி வீட்டு மானியம்

- முதல் முறை வீடு வாங்குவோருக்கு, **$160,000** வரையிலான **வீட்டு மானியங்கள்**
- நிதியுதவிகள் பெற்ற வீடுகளுக்கும் எக்சிகியூடிவ் கூட்டுரிமை வீடுகளுக்குமான மாதாந்திரக் குடும்ப வருமான உச்ச வரம்பு, முறையே **$14,000** மற்றும் **$16,000**-க்கு உயர்த்தப்படுதல்



BUDGET 2020 Support. Transform. Care. Secure.

# பணி ஓய்வுக்காலத்திற்கான உத்தரவாதம்

சிங்கப்பூரர்கள் பணி ஓய்வுக்காலத்திற்குச் சேமிக்க உதவுதல்

## வெள்ளிக்கு வெள்ளி அடிப்படையில், மத்திய சேமநிதி ஓய்வுக்காலக் கணக்கில் தொகை நிரப்பும் சேமிப்புத் திட்டம்

- அரசாங்கம், மத்திய சேமநிதி ஓய்வுக்காலக் கணக்கில் நிரப்பப்படும் ஒவ்வொரு வெள்ளி ரொக்கத்திற்கும் இணையாக, **வெள்ளிக்கு வெள்ளி என்ற அடிப்படையில்**, 2021-ஆம் ஆண்டு முதல் 2025-ஆம் ஆண்டு வரையில், **ஆண்டுக்கு $600 வரை நிரப்பும்**
- பணி ஓய்வுக்காலத்திற்கான தற்போதைய அடிப்படைத் தொகை இல்லாத, குறைந்த – நடுத்தர வருமானமுடைய, **55 முதல் 70 வயது வரையிலான** சிங்கப்பூரர்களுக்கு
- தகுதிபெறும் சிங்கப்பூரர்கள், வெள்ளிக்கு வெள்ளி என்ற அடிப்படையில், **$3,000 வரையிலான சேமிப்புத் தொகையை**, ஐந்தாண்டு காலத்தில் பெறக்கூடும்



BUDGET 2020 Support. Transform. Care. Secure.

# பணி ஓய்வுக்காலத்திற்கான உத்தரவாதம்

பணி ஓய்வுக்காலத்தில் குறைவான தொகை உடையவர்களுக்கு உதவுதல்

## மூத்தோர் ஆதரவுத் திட்டம்

- காலாண்டு **ரொக்க வழங்குதொகைகளை** 1 ஜனவரி 2021 முதல் **20% அதிகரித்தல்**
- **ஒவ்வொரு காலாண்டுக்கும் $900 வெள்ளி வரையிலான** ரொக்க வழங்குதொகைகள்
- அதிகமான மூத்தோர் பயன்பெறும் வகையில், **வழங்குதொகைக்கான புதிய பிரிவைக்** கொண்டு, தகுதிபெறுவதற்கான நிபந்தனைகளை விரிவுபடுத்துதல்

வீட்டுவசதி சொத்துக்களைப் பணி ஓய்வுக்காலத்திற்குப் பயன்படுத்திக்கொள்ளுதல்

## வீட்டுவசதி சொத்துக்களைப் பணமாக்குதல்

- மூத்தோர் தங்களது வீட்டுவசதி சொத்துக்களைப் பணி ஓய்வுக்காலத்திற்குப் பயன்படுத்திக்கொள்ள உதவும் வகையில், **முதியோர் வீட்டுவசதி போனஸ், குத்தகையைத் திரும்ப வாங்கும் திட்டம்** ஆகியவற்றை மேம்படுத்துதல்



BUDGET 2020 Support. Transform. Care. Secure.

# பணி ஓய்வுக்காலத்திற்கான உத்தரவாதம்

## சுகாதாரப் பராமரிப்பிற்கும் முதியோர் பராமரிப்பிற்கும் ஆதரவு

- பொது சுகாதாரப் பராமரிப்பு நிலையங்கள், முதியோர் பராமரிப்பு சேவைகள் ஆகியவற்றில் **80% வரையிலான சுகாதாரப் பராமரிப்பு நிதியுதவிகள்**
- **சமூக சுகாதார உதவித் திட்டம் (சாஸ்), முன்னோடித் தலைமுறைத் தொகுப்புத்திட்டம்** மற்றும் **மெர்டேக்கா தலைமுறைத் தொகுப்புத்திட்டம்** ஆகியவற்றின் மூலம் சுகாதாரப் பராமரிப்புச் செலவுகளுக்கு உத்தரவாதம் அளித்தல்
- **கேர்ஷீல்டு லைஃப்** மற்றும் **நீண்டகால பராமரிப்பு ஆதரவு நிதி** ஆகியவற்றின் மூலம் நீண்டகால பராமரிப்புக்கான ஆதரவை வலுப்படுத்துதல்
- **மூத்தோர் நடமாட, இயங்க உதவிநிதி** மூலம் துணைபுரியும் சாதனங்களையும், இல்லச் சுகாதாரப் பராமரிப்புப் பொருட்களையும் வாங்க ஆதரவு வழங்குதல்



BUDGET 2020 Support. Transform. Care. Secure.

# பரிவுமிக்க, அனைவரையும் உள்ளடக்கிய சமூகத்தை உருவாக்குதல்

## சமூகத்திற்கு ஆதரவு

- சமூக சேவைத் துறையிலுள்ள பங்காளிகளின் ஆற்றலையும் திறமையையும் வளர்ப்பதற்கு ஆதரவளிக்க, **சமூக ஆற்றல் அறக்கட்டளை நிதி**
- உடலளவில் இயலாமையுள்ள சிங்கப்பூரர்களை வேலைக்கு அமர்த்தும் நிறுவனங்களுக்கு சம்பளக் கழிவுத் தொகைகளை வழங்க **உடற்குறையுள்ளோருக்கான வேலை நியமன உதவித் தொகை**
- **நிதிகளில் தொகை நிரப்புதல்**
  - முதியோர் நலன் நிதிக்கு **$750 மில்லியன்** தொகை நிரப்புதல்
  - சமூகநல நிதிக்கு (கொம்கேர்) **$500 மில்லியன்** தொகை நிரப்புதல்
  - மெடிஃபண்டு மருத்துவ நிதிக்கு **$200 மில்லியன்** தொகை நிரப்புதல்



BUDGET 2020 Support. Transform. Care. Secure.

# பொருள், சேவை வரி அதிகரிப்பின் தொடர்பில், சிங்கப்பூரர்களுக்கு உதவுதல்

பொருள், சேவை வரி உயர்த்தப்படும்போது, அதன் அதிகரிப்பை ஈடுசெய்ய சிங்கப்பூரர்ளுக்கு வழங்கப்படும் உதவி

## பொருள், சேவை வரி அதிகரிப்பை இடைக்காலத்திற்கு ஈடுசெய்ய உதவும் உத்தரவாதத் தொகுப்புத்திட்டம்

- 2022-ஆம் ஆண்டுக்கும் 2025-ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலகட்டத்தில் பொருள், சேவை வரி அதிகரிப்பு நடப்புக்கு வரும்போது, இந்தத் தொகுப்புத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்
    - 21 வயதுக்கும் மேற்பட்ட சிங்கப்பூரர்களுக்கு, **ஐந்தாண்டுக் காலத்தில் $700 முதல் $1,600 வரை** ரொக்க வழங்குதொகை
    - குறைந்தது **ஐந்தாண்டு காலத்திற்கான கூடுதல் பொருள், சேவை வரிச் செலவுகளை** ஈடுசெய்ய, பெரும்பாலான சிங்கப்பூர்க் குடும்பங்களுக்கு உதவி வழங்கப்படும்
    - **குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு மேலும் அதிக உதவி கிடைக்கும்.** அதன்படி, ஓரறை முதல் மூவறை வரையிலான வீவக வீடுகளில் வசிப்போர், சுமார் **பத்தாண்டுக் காலத்திற்கான கூடுதல் பொருள், சேவை வரிச் செலவுகளை** ஈடுசெய்வதற்குரிய உதவியைப் பெறுவார்கள்

**பொருள், சேவை வரி**
**2021-ஆம் ஆண்டு <u>அதிகரிக்கப்படமாட்டாது</u>**



# உருவாக்கிப் பாதுகாத்தல்

BUDGET 2020 Support. Transform. Care. **Secure**.

# நீடித்து நிலைக்கத்தக்க சிங்கப்பூர்

## பருவநிலை மாற்றத்திற்கு ஆயத்தமாதல்

- உயரும் கடல் மட்டங்களுக்கு எதிரான பாதுகாப்பிற்கு, **5 பில்லியன் வெள்ளி மதிப்புள்ள கடலோர, வெள்ளப் பாதுகாப்பு நிதி**
- **கரியமில வாயு வெளியேற்றத்தைக் குறைத்தல்**
- **குறைவான கரியமில வாயு வெளியேற்றத்தைக் கொண்ட பொருளியலை உருவாக்குதல்**
- நீடித்து நிலைக்கத்தக்க முயற்சிகளுக்கான சமூகப் பங்காளித்துவங்களுக்கு **எஸ்ஜி சுற்றுச்சூழல் நிதி**



BUDGET 2020 Support. Transform. Care. **Secure**.

# நீடித்து நிலைக்கத்தக்க சிங்கப்பூர்

## பசுமையான சிங்கப்பூர், சுத்தமான எரிசக்தி

- **வீடமைப்பு வளர்ச்சிக் கழகத்தின் பசுமை நகர்த் திட்டம்**
  - **2030**-ஆம் ஆண்டுக்குள், அனைத்து வீடமைப்பு வளர்ச்சிக் கழகப் பேட்டைகளும், சுற்றுச்சூழலுக்கு உகந்த இடங்களாக மாற்றப்பட்டும்
- குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள், **எரிசக்திச் செயல்திறன் மிகுந்த வீட்டுச் சாதனங்களைப்** பயன்படுத்த ஊக்குவிப்புத் தொகைகள்
- **சுத்தமான எரிசக்தி கொண்ட போக்குவரத்து**
  - **மின்சார வாகனங்களுக்கான** மின்னூட்டு உள்கட்டமைப்பை விரிவுபடுத்துதல்
  - **மின்சார வாகனங்களுக்கு முன்கூட்டியே பதிவு செய்துகொள்வதற்கான பதிவுக் கட்டண ஊக்குவிப்புத் தொகை** – கூடுதல் பதிவுக் கட்டணத்தில், **45% வரையிலான தள்ளுபடி (அதிகபட்சமாக $20,000)**



BUDGET 2020 Support. Transform. Care. **Secure**.

# ஒன்றுபட்ட சிங்கப்பூர்

நமது ஒருமித்த பலங்களை ஒன்றுதிரட்டுதல்

## அரசாங்கத்திற்கும் குடிமக்களுக்கும் இடையிலான பங்காளித்துவங்கள்

- மேலும் அதிகமான அடித்தள முயற்சிகளை ஆதரிக்க, **நம் சிங்கப்பூர் நிதியை** நீட்டித்து, அதில் பணம் நிரப்புதல்
- **பங்காளித்துவங்களை** விரிவுபடுத்துவதிலும் மேம்படுத்துவதிலும் முதலீடு செய்தல்
- பொதுமக்களிடமிருந்து நல்ல யோசனைகளையும் தீர்வுகளையும் உருவாக்குவதற்காக, **முக்கியமான சமுதாய பிரச்சனைகளை** அடையாளம் காணுதல்



MOF
MINISTRY OF FINANCE
SINGAPORE